முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**E.A.No.07/2023**

in

**E.P.No.13/2021**

**in**

**O.S.No.261/2014**

1. ஜெயஸ்ரீ
2. சக்திவேல் ... மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/எதிர்/

பரமேஸ்வரி ... எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி

இம்மனுவானது 14.10.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.மருதராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

மனுதாரர்களால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 106 மற்றும் பிரிவு 151–ன் கீழ், E.P.No.13/2021–ல் மனுதாரர்கள் தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 26.06.2023 தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.10.14 18:16:50 +0530

2) E.P.No.13/2021–ல் மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 26.06.2023 தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய குறிப்பிட்ட 30 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்யாமல் 8 நாட்கள் காலதாமதமாக தாக்கல் செய்துள்ள மனுவை மன்னித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருந்த E.A.No.8/2023 மனுவானது இன்று தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

3) இந்நிலையில், E.P.No.13/2021–ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவான E.A.No.07/2023 மனுவை நிலுவையில் வைத்திருப்பதால் மனுதாரர்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படபோவதில்லை.

4) ஆகையால், மேற்கண்ட பரிசீலனையில் இருந்து மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட E.A.No.07/2023 மனுவானது இன்று இந்நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

<u>**5) இறுதியாக**</u>

E.A.No.8/2023 in E.P.No.13/2021 மனுவானது இன்று தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ள காரணத்தினால், இம்மனுவானது முடித்து வைக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.10.14 18:17:02 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் </u>:–** **– இல்லை –**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.10.14 18:17:34 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சங்கரன்கோவில்.**

முு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
E.A.No.07/2023
in
E.P.No.13/2021
in
O.S.No.261/2014
உத்தரவு (Draft / Fair)
நாள் : 14.10.2025